அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் VII.] MARCH, 1907–௵ மார்ச்சு. [இலக்கம் 1.

மரக்கறி புசிப்பவர் தமது அனுபவத்தில் கண்டறிந்த உணவு.

மரக்கறி பதார்த்தங்களைப் புசிப்பதனா லாகும் மேன்மையை ஐரோப்பியர் ஒருவர் பின்வருமாறு புகழ்ந்து பேசுகிறார். மரக்கறியென்றால், காய், கனி, கிழங்கு, கீரை, தண்டு, பலவிதமான தானியங்கள் முதலாய்ப் பூமியில் உற்பத்தியாகும் பலவகையான சிறந்த ஒஷதிகளெல்லாம் சேரும். இந்த ஒஷதி வகைகளாலேயே மானிட சரீரம் நன்றாய் உருவமைந்து, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவரும். நாற்பத்தைந்து வருஷகாலமாக நான் தானியம், காய், கிழங்கு முதலியவைகளையே புசித்து வருகிறேன். இப்பொழுது எனக்கு 85 வயதாகியும் தேகசௌக்கியம் சிறிதும் குறைவுபடாமலிருக்கிறது. இத்தனை நாளாய்ச் செய்துவந்த வேலையைப்பார்க்கிலும் இப்பொழுது இன்னும் அதிகமாகப்புத்தியால்உழைத்து வேலைசெய்யும் உற்சாகமுள்ளவனாய் இருக்கிறேன். எவ்வளவு வேலைசெய்தாலும் எனக்கு உடம்பில் சிறிதும் இளைப்புத் தட்டுவதில்லை. செத்துப்போன ஆடு, மாடுகளின் பிணங்களைப் பிடுங்கித் தின்ன வேண்டுமென்கிற ஆசை எனக்கு ஒருபொழுதும் உண்டாகவேயில்லை. கசாப்புக்கடை வழியாய் நீங்கள் எப்பொழுதாவது போயிருப்பீர்களல்லவா? அங்கே பிராணிகளின் தோலுரிக்கப்பட்ட பிணங்கள் வரிசை வரிசையாய்க் கட்டித் தொங்குகிற அருவருக்கத்தக்க காட்சியைக் கண்ணாரக் கண்டால் மறுபடி அவைகளைப் பிடுங்கித் தின்னவேண்டுமென்கிற ஆசை எவனுக்காவது உண்டாகுமா, யோசித்துப்பாருங்கள். அந்த மாமிசங்கள் அழுகி அவற்றின் துர்க்கந்தம் அரை மைல் தூரத்துக்கப்பால் வீசுவதை மூக்கால் மோரும்பொழுதே உடம்புக்கு நோய் வந்துவிடுமென்று பயமுண்டாகிறதே!

முக்கியமாக மனிதர்கள் மாமிசம் தின்னப் பிறந்த மிருகங்களல்லர். அமிர்தபானம் பண்ணப் பிறந்த தேவதைகளேயாம். மாமிசம் தின்றால் உடம்புக்கு அதிகமான வலிவு உண்டாகுமென்று அநேகர் வீண்சாக்குச் சொல்லுவார்கள். அதைப் பார்க்கிலும் பேதமை வேறில்லை. யானை, குதிரை, ஆடு, மாடு முதலான பிராணிகள் சாகபக்ஷிணிகளா? மாமிசபக்ஷிணிகளா? அவைகளுக்குள்ள தேகபலம் மற்றெந்தப் பிராணிக்கிருக்கிறது யோசித்துப்பாருங்கள். புசிப்பதற்கு நல்ல ஒஷதிவகைகள் கிடைக்காத நாடுகளில் வசிக்கும் முரட்டு ஜனங்கள் தம் பசியைத் தணிக்க வேறு வழி தெரியாமல், அங்குள்ள மிருகங்களையும், மீன்முதலான நீர்வாழ் ஜந்துக்களையும் பிடித்துத் தின்னப் பழகின துர்வழக்கத்தைப் பார்த்து, சகலமான காய்கனி வகைகளும் ஒன்றாலொன்று குறைவில்லாமல் நிறைந்த தேவலோகம்போலிருக்கும் நாடுகளில் வசிக்கும் நாமும் அநியாயமாய் உயிர்க்கொலை செய்து ஏன் பாவத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்? ஆகையால், நாம் ஏற்ற நல்லுணவுகளைப் புசித்து நல்லெண்ணமுள்ளவர்களாய் நல்லவழியில் நடந்து வாழ்ந்து கடவுளுடைய கருணைக்குப் பாத்திரமாகக் கடவோம்.

மனிதர்போன்ற நுட்ப புத்தியுள்ள நாற்கால் ஜந்துக்கள்.

ஒரு பெரிய பட்டணத்தில் ஒருநாள் இராத்திரி தனவந்தனான ஒருவன் தனது மாடிவீட்டில் தன் குடும்பத்துடனே படுத்து நித்திரைசெய்துகொண்டிருந்தான். பாதிராத்திரியில் அங்கே அவர்களுடன் படுத்திருந்த இரண்டு பூனைகள் அவர்களையெழுப்பிக் காப்பாற்றினதை ஆச்சரியமாய்ச் சொல்லுகிறார்கள். அந்த அறையில் வைத்திருந்த விளக்கு அதிகமாய் எரிந்து அண்டையிலிருந்த துணியிலே தீப்பற்றி அறைமுழுமையும் புகை சூழ்ந்துகொண்டது. அப்பொழுதும் அவர்கள் எழுந்திராமல், மெய்மறந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட அபாயமான தருணத்தில் அங்கிருந்த பூனைகள் தீப்பற்றி யெரிவதைப் பார்த்துப் பயந்து உறுமிக் கூச்சலிட்டு, அவர்களின் கைகளையும், கால்களையும் பீறி அவர்களை எழுப்பத் தலைப்பட்டன. அவர்களுக்கு அப்பொழுது நல்ல நித்திரையாய் இருந்ததனால் உடனே அவர்களுக்குக் கண் விழிக்கவில்லை. ஆனாலும், பூனை விடாமல் உபத்திரவப்படுத்தியதனால் வீட்டுக்காரி கொஞ்சம் ஸ்மரணைவந்து நெருப்பெரிவதனால் உண்டாகும் நாற்றத்தை மோந்து சற்றுக் கண்விழித்துப் பார்த்தாள். நேரிட்டிருக்கும் அபாயம் இப்படிப்பட்டதென்று தெரிந்துவிட்டது. தக்ஷணமே அவள் எழுந்து கூக்குரலிட்டுக் கணவன் முதலானவர்களையெழுப்பிவிட்டாள். இந்தக் கூச்சல்கேட்டுப் பக்கத்தறையில் படுத்திருந்தவர்களும் எழுந்தோடி வந்தார்கள். கீழே படுத்திருந்த வேலையாட்களும் இந்த ஆரவாரத்தைக் கேட்டு அதிசீக்கிரமாக வந்து தீயை அவித்துத் தணியச்செய்தார்கள். இப்படிப்பட்ட பெரிய ஆபத்தான தீக்கொள்ளைக்கு அந்தக் குடும்பத்தார் தப்பிப்பிழைத்தது இந்தப்பூனைகளின் பேருதவியாலன்றோ? நன்றியறிவுள்ள இந்த எளிய ஜீவன்கள், இன்னும் பத்து நிமிஷகாலம் இவர்களை எழுப்பாமல் பராக்காயிருந்துவிட்டால், குஞ்சு குழந்தைகளோடு அந்தக் குடும்பத்தார் கதி என்னவாயிருக்கும் யோசித்துப்பாருங்கள். தருணம் தப்பாமல் தமது எஜமானர்களை யெழுப்பி அவர்கள் உயிரைக் காப்பாற்றின பூனைகளிடத்தில் அவர்கள் பாராட்டவேண்டிய நன்றி இவ்வளவென்று நம்மால் அளவிட்டுச் சொல்லமுடியுமோ?

தன் தொழுவத்தைத் தானே தேடிப்போன மாடு.

தனக்கு எல்லாம் தெரியுமென்று சிறிது கர்வம் தலைக்கேறின நாட்டுப்புறத்தா னொருவனுக்கு வண்டி எருதொன்று வேண்டியிருந்தது. அவனிடமிருந்த பழைய எருது வெகுநாள் உழைத்து வேலைசெய்யச் சக்தியில்லாமல் கிழமாய்ப் போய்விட்டது. அதனால் அவன் அந்த எருதை விற்றுப் புதிதாக நல்ல எருது ஒன்று வாங்கவேண்டுமென்று நிச்சயித்து, அப்படியே யொருநாள் அடுத்த பெரிய ஊரில் கூடின சந்தைக்குத் தன் எருதை ஓட்டிக்கொண்டு போனான்.

அந்த எருதுக்கு அவன் சொன்னவிலை மிகவும் சொற்பமாய் இருந்ததனால், அதிக சீக்கிரமே அது சந்தையில் விலையாகிவிட்டது. ஆனாலும், அவன் இஷ்டப்படி நல்லதாய் வேறொரு எருது அகப்படுவது வருத்தமாயிருந்தது. சில எருதுகள் மிகவும் பெரியவைகளாய் இருந்தன; அநேகம் காளைகள் குட்டையாயிருந்தன; பல மாடுகள் இவனால் வாங்கச் சாத்தியமில்லாதபடி விலை அவ்வளவு அதிகமாய் இருந்தன. இவன் என்னசெய்வான்? அன்று பகல் முழுவதும் எருதுக்காகச் சந்தையெல்லாம் அலைந்து திரிந்தான்; அவன் மனதுக்குத் திருப்தியாய் ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாய், மாலை மயங்குகிறவேளையில் அவனுக்குப் பிரியமான எருது ஒன்று அவன் கண்ணில் புலப்பட்டது.

அதைப்பார்த்து இதுதான் நமக்கு ஏற்ற நல்ல எருதென்று சந்தோஷப்பட்டு அதையே வாங்கிக்கொள்ளவேண்டுமென்று இவன் தீர்மானித்தான். அந்த எருதுக்கு உடையவன் அதற்குச் சொன்ன விலை, இவன் விற்ற எருதின் விலைக்கு இரட்டத்தனையதிகமாயிருந்தது. அவ்வளவுதொகை கொடுத்து வாங்கவும் இவனுக்குச் சக்தியில்லைதான். ஆனாலும், அதை விட்டால் வேறு விதியில்லையென்று, கேட்ட தொகையைக் கொடுத்து அந்த எருதை வாங்கிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினான்.

அவன் ஓட்டிக்கொண்டு போகும்பொழுது அந்த மாடு சிறிதும் முரட்டுத்தனம் செய்யாமல் நேராகவே நடந்துபோயிற்று. அதுகண்டு அவன் நமக்குச் சாதுவான நல்ல எருது கிடைத்ததென்று சந்தோஷத்துடனே ஓட்டிக்கொண்டுபோனான். சீக்கிரமே வீடுபோய்ச்சேர்ந்து அவன் தன் வேலைக்காரனை யழைத்து 'இதோ நான் புதியமாடு வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன் பார்' என்று தான் செய்த வியாபாரத்தைப் பெருமையாகப்பேசி மகிழ்ந்தான். வந்தவேலைக்காரன் முதலில் அந்த எருதை உற்றுப் பார்த்து, பிறகு எஜமானன் முகத்தை விழித்துப் பார்த்து, மறுபடியும் அந்தக் காளையை நன்றாகக் கண்ணுற்று, 'இதென்ன ஐயா! நமது பழைய எருதையே மறுபடியும் வாங்கிக்கொண்டு வந்து சேர்ந்தீர்களே?' என்றான். அதற்கு அந்த எஜமானன் ஒரு குதிகுதித்து, 'இல்லை, இல்லை, இது நம்முடைய பழைய எருதுபோலவே இருப்பதனால் இதைப் பார்த்து நீ மயங்குகிறாய், நான் இதைக் கண்டுபிடிக்க வாங்க வெகுநேரம் சென்றதே. நமது எருதை விற்ற தொகையைப்பார்க்கிலும், இரட்டிப்புத் தொகைகொடுத்து நான் இதை வாங்கினேன். நமது எருதுக்குக் கொம்பு இதன் கொம்பைப்பார்க்கி

லும் கொஞ்சம் குட்டையல்லவா? வால் இவ்வளவு நீளமில்லையே! அந்த எருது இவ்வளவு கறுப்பா? உற்றுப்பார், ஏன் பிரமிக்கிறாய்' என்று சொன்னான். வேலைக்காரன் மறுபடியும் அதை நன்றாக நிதானித்துப் பார்த்து 'நீர் நூதனமாக வாங்கி வந்தது நமது பழைய எருதுதான், சந்தேகமில்லை' என்றான். 'உனக்குத் தெரியாது, நன்றாக நிதானித்துப் பாராமல் நீ பேசுகிறாய்' என்று குடியானவன் கெட்டியாய்ச் சொன்னான். இவர்களிப்படி வாக்குவாதம் செய்துகொண்டிருக்கையில், அந்த எருது தன்னை வழக்கமாய்க் கட்டுகிற இடத்தில் தானே போய் நின்று, அவர்களுடைய சந்தேகத்தைத் தீர்த்துவிட்டது.

புத்திக் கூர்மையுள்ள ஒரு பூனை சொன்னது.

பூனைகள் பக்ஷிகளைப் பிடித்துக் கொல்லுகின்றனவென்று பலவிதமாகப் பத்திரிகைகளில் தூஷித்து எழுதியிருப்பதைப் பார்க்க மிகவும் வருத்தமுண்டாகின்றது. பூனைகள் பக்ஷிகளைக் கொல்வது கொடுமையான காரியமென்பதில் சந்தேகமில்லை. ஆனாலும், மனிதர்கள் பக்ஷிகளைமாத்திரமேயன்றி, ஆடு மாடுகளையும், மற்றும் பல மிருகங்களையும், மனிதர்களையுங்கூடக் கொல்லுவதைப் பார்க்கும்பொழுது, பூனைகளால் உண்டாகும் கொலை ஒரு கொலையாகவே புத்திக்குத் தோற்றாதே. இந்தக் கொலைக்குற்ற விஷயத்தில் புத்திசாலியான ஒரு பெரிய பூனையின் அபிப்பிராயத்தைக் கவனிப்பது மிகவும் முக்கியமானது. அப்பூனை சொல்வதாவது: என் ஜாதியைச்சேர்ந்த சில பூனைகள் பறவைகளைக் கொல்லுகின்றன வென்பது உண்மையே! ஆனால், என்ன? அவை பிடிப்பது குருவிகளைத்தானே. எந்தப் பூனையும் எப்பொழுதும் விளையாட்டுக்காகப் பக்ஷிகளைக் கொல்வதில்லை. பசியெடுத்தபோது உணவுக்காகவே இரண்டொன்றைப் பிடித்துக் கொல்லுகிறது. அதேவிதமாய் உணவுக்காக நீங்கள் ஆடு மாடுகளை அடிக்கிறீர்களன்றோ! பூனைக்குப் புசிக்கப் பக்ஷிமாமிசமே வேண்டுமென்பது அவசியமில்லை; பசியைத் தணிக்க மற்றொன்றும் கிடைக்காவிட்டால், அப்பொழுதே தற்செயலாய்க் கிடைத்த இரண்டொரு குருவிகளைப் பூனை பிடித்துத் தின்கிறதேயன்றி வேறில்லை; உங்களைப்போல விநோதத்துக்காகப் பறவைகளை வேட்டையாடுவதில்லையே. விநோதமாய்ப் பொழுதுபோக்க எங்களுக்குள்ளே பலவிதமான விளையாட்டுக்கள் உண்டு. கையில் துப்பாக்கியை யெடுத்துக்கொண்டு நாய்களையும் கூட்டிக்கொண்டு பறவைகளை வேட்டையாட நாங்க ளெப்பொழுதும் வெளியே போவதில்லையே! உண்மையில் நாய்களைக் கண்டால் எங்களுக்கே நடுக்கம்தான். பறவைகளைக் கொன்று அவற்றின் சிறகுகளை உங்களுடைய பெருமாட்டிகளும், மற்றும் பல மூரட்டு ஜனங்களும் அழகென்று நினைத்து சிரோபூஷணமாகத் தரிப்பதுபோல, நாங்கள் ஒருபொழுதும் தரிப்பதில்லையே! அப்படியிருக்க, எங்கள் மீதே கொடுமையான கொலைக்குற்றம் சாற்றக் காரணமென்ன? உங்கள் பட்டணங்களிலே பெரும் துன்பம் செய்கிற எலி, சுண்டெலி முதலானவைகளைப் பயப்படுத்தி வரவொட்டாமல் செய்து உங்களுடைய பண்டம்பொருள்களைப் பத்திரமாய்க் காப்பாற்றுகிறோமே! அந்த உபகாரத்துக்காக நீங்கள் எங்களை மேலாகக் கொண்டாடவேண்டுவது அவசியமல்லவா? என்று சொல்லிற்று. இப்படித் தங்கள்மேல் பெரிய பழியை வைத்துக்கொண்டு எளிய வாயில்லா ஜந்துக்களிடத்தில் வீண்பழிபோட்டு அவைகளையும் கொல்லக் கருதி, விவேகிகளென்று பேர்பூண்ட மனிதர்கள் வீணாய் ஏன் கொலைபாதகர்களாக எண்ணுகிறார்களோ தெரியவில்லை.

தபால்வண்டிக் குதிரைகள் படும்பாடு.

பலவிடங்களிலே தபால்வண்டிக் குதிரைகள் படும் சங்கடங்களைப் பார்த்துப் பலர் மிகவும் பரிதாபப்பட்டு, அக்குதிரைகளுடைய வருத்தங்களைப் போக்க வேண்டுமென்று பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். யார் என்ன பிரயத்தனம் செய்கிறார்களோ தெரியவில்லை; தபால் குதிரைகளின் வருத்தங்கள்மாத்திரம் அங்கங்கே பார்ப்பவர்கள் மிகவும் துக்கிக்கத்தக்கவைகளாகவே யிருக்கின்றன.

நாட்டுப்புறங்களில் குதிரைவண்டிகள் போக நன்றாய்ச் செப்பனிடப்பட்ட ஒழுங்கான பாதைகளில்லை. அங்கங்கே உடைந்து இடிந்து பாதைகள் மேடும்பள்ளமுமாய்க் கரடுமுரடாய் இருக்கின்றன. ஒழுங்கில்லாத அந்தப் பாதைகளிலேயே பலமைல் தூரம் குதிரைகள் வண்டியை இழுத்துக்கொண்டு போகும்படியாயிருக்கின்றன. சிறிது தூரம் போவதற்குள்ளேயே அப்படிப்பட்ட வழிகளில் குதிரை அதிகமாய்க் களைத்துக் கால்சாறிப்போகும் என்பதை நாம் எடுத்துச் சொல்லவேண்டுவதில்லையே! ஆனாலும், என்ன செய்யலாம்; தபால் வண்டியன்றோ! மணி தப்பாமல் இருப்புப்பாதை நிலையில் தபால் சேரவேண்டுமல்லவா? என்று சாக்குச்சொல்லிக் களைத்துப்போன குதிரைகளைக் கொடுமையாய் இம்சித்து வேகமாய் ஓட்டிக்கொண்டு போவதைப் பலவிடங்களில் நாம் கண்ணாரக் கண்டிருக்கிறோம். குதிரைகளைக் கொடுமை செய்வதற்குக் காரணம் ராஜாங்கத்துத் தபால் வண்டியில் கட்டப்பட்டிருப்பதே யென்று சாக்குச்சொல்வதைப் பார்க்கிலும் வெட்கக்கேடு வேறு

உண்டோ? ஜீவகாருணியமுள்ள மனிதர்கள் இந்தக் கடினமான வேலைக்குத் தகாத குதிரைகளைத் தபால் வண்டிகளில் கட்டி ஓட்டி இம்சிக்கமாட்டார்களென்பது நிச்சயம். ஆனாலும், ஜீவகாருணியமில்லாத அநேகர் குதிரை எப்படியானாலுமாகட்டுமென்று பணத்தையே பெரிதாகப்பார்த்து உழைத்து உபயோகமற்றுப்போன குதிரைகளைச் சொற்பவிலைக்கு வாங்கித் தபால்வண்டியில் கட்டி ஓட்டி, சாகுமளவும் இம்சிக்கிறார்கள். அது இறந்துபோனால் அதேவிதமாகவே மற்றொருகுதிரைவாங்கி அதையும் அப்படியே கால்சாறும்படி யடிக்கிறார்கள். அதுவேயன்றி ஒரேதடவையாய்த் தபால் வண்டியின் வருத்தங்களைத் தாங்கும்படியான வலிவுள்ள குதிரைகளை வாங்கிச் சுகமாய் உழைக்கும்படிச் செய்வதில்லை. தபால் வண்டி ஓட்டும்படி ஏற்படுத்தப்படுகிறவர்கள் இப்படிக் குதிரைகளைச் சரியாய் நடத்துவார்களென்று நம்பத்தகாதவர்களா யிருப்பதாலும், அவர்களால் உண்டாகும் ஜீவஹிம்சை அநேகமாய்த் தங்களையே சேருமாகையாலும், இந்த விஷயத்தைத் துரைத்தனத்தார் தாமே மேற்போட்டுக்கொண்டு, கிழமாகி மெலிந்துபோன குதிரைகளைத் தபால் வண்டிகளில் ஒருபோதும் கட்டக்கூடாதென்றும், அப்படிச் செய்கிறவர்களைத் தப்பாமல் தண்டிக்கலாகுமென்றும் கண்டிப்பான சட்டம் விதித்து, அவர்கள் அப்படியே செய்துவருகிறார்களா வென்பதைக் கண்காணிக்க மேல்விசாரணைக்காரர்களையும் நியமித்துவிட்டால், இந்த ஜீவஹிம்சை அநேகமாக ஒழிந்துபோகுமன்றோ?

துரைத்தனத்தார் தங்களுக்குக் கொடுக்கும் சம்பளம் வலிவுள்ள நல்ல குதிரைகளை வாங்குவதற்குச் சிறிதும் போதாமலிருக்கிறதென்று தபால் வண்டிக்காரர்களில் பலர் முறையிடுகின்றார்கள். அநேகமாய் அது உண்மையாகவேயிருக்கலாம். உண்மையாயிருந்தால் அவர்கள் நல்ல குதிரைகள் வாங்குவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமே. அப்படிப்பட்ட நல்ல குதிரைகள் வாங்கிக் கொடுத்தும், அதன் வயிற்றுக்குப் போதுமான தீனி போடாமலும் மிதம்மிஞ்சி உழைக்கச் செய்தும் எவனாவது இம்சிக்கக் கண்டால் அவனை உடனே அந்த வேலையினின்றும் நீக்கிவிடவேண்டும். உழைக்கச் சக்தியில்லாமல் கிழமாய்ப்போன குதிரையைக் காப்பாற்றுவதற்குப் பிடிக்கும் செலவைப்பார்க்கிலும் நல்ல குதிரையைக் காப்பாற்றுவதற்கு அதிகமாகச் செலவு பிடிக்காது. இப்படிச் செய்தபிறகும் எந்தத் தபால்வண்டிக்காரனாவது தபால்வண்டியென்று சாக்கிட்டுக் குதிரையை அளவுக்குமிஞ்சி யதிகமாய் ஓட்டினாலும் பட்டினி போட்டாலும், இந்த விஷயங்களை வழியில் பார்த்தவர் தெரிவிக்கும்பக்ஷத்தில் தக்ஷணமே விசாரணை செய்யாமலே அவனை வேலையினின்றும் நீக்கிவிடுவது உத்தமமானகாரியம்.

கன்னக்களவைக் காட்டிக் கொடுத்த பூனை.

ஆதரிப்பார் ஒருவருமில்லாமல் பசியால் தனியே அல்லாடி இரைதேடித் திரியும் ஏழையான ஒரு பூனை ஒருநாள் இராத்திரி இரைக்காக ஒரு பிரபுவின் வீட்டுக்குப் போய்ப் பெருங்கூச்சலிட்டுக் கூவி, அவ்வீட்டு எஜமானனுடைய நித்திரையைக் கெடுத்துவிட்டது. அதனால் அவன் கடுங்கோபங் கொண்டு, 'இந்தப் பூனையை நான் இதோ அடித்துக் கொன்றுவிடுகிறேன் பார்' என்று சொல்லிச் சிறிதும் இரக்கமில்லாமல் அதைத் துரத்திக்கொண்டு கீழேயிறங்கி ஓடினான். இவன் வருகிற சந்தடி கேட்டு அங்கிருந்த மூன்று திருடர்கள் புழக்கடைக் கதவைத் திறந்துகொண்டு ஓடிப்போனார்கள். அதைப்பார்த்து அவன் உடனே தன் வேலைக்காரர்களை எழுப்பி ஊர்க்காவலாளர் தெருவில் யாராவது இருக்கிறார்களாவென்று பார்த்து அழைத்துவரும்படி யனுப்பிவிட்டு, தான் துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டு கன்னம் வைத்தவர்களைத் துரத்திக்கொண்டு ஓடினான். ஓடும்போது வழியில் காலண்டையிலே பெரிய மூட்டையொன்று கிடந்தது. அதைப்பார்த்து அவன் திடுக்கிட்டு அம்மூட்டையை யவிழ்த்துப் பார்த்தான். அதில் இரண்டாயிரம் (2,000) ரூபாய் விலைபெறும்படியான வெள்ளிப் பாத்திரங்களும், பொன்னாபரணங்களும், நிறைந்து கிடந்தன. அதைப் பார்த்தபொழுது அவனுக்குண்டான சந்தோஷமும், பரிதாபமும் இவ்வளவென்று சொல்ல நம்மால் முடியுமோ? இப்படிக் கள்ளர் கையில் அகப்பட்ட பொருளையெல்லாம் இழந்துபோகாதபடி ஏற்ற சமயத்தில் வந்து கூச்சலிட்டு நம்மை யெழுப்பிவிட்ட மகோபகாரியான இந்தப் பூனையை நாம் பகையாளி யென்று நினைத்துக் கொலைபாதகம் செய்யக் கருதினோமல்லவா என்று தன் மனதைத் தானே வெறுத்துக் கொண்டு அந்தப் பூனையினிடத்தில் அவன் அதிகமான நன்றி பாராட்டினான். இதற்குள் அந்தப் பூனை எஜமானன் துரத்திக்கொண்டு ஓடிவந்ததைப் பார்த்துப் பயந்து தெருத்திண்ணையில் ஒரு மூலையிலே போய்ப் பதுங்கிக்கொண்டிருந்தது. ஊர்க்காவலாளர் கள்ளர்களைக் கண்டு பிடித்தார்களோ இல்லையோ, அதை நாம் இங்கே விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. அந்த வீட்டுக்காரன் தன்னை யெழுப்பின பூனையை உடனே தேடிக் கண்டு பிடித்து அதன் கழுத்தில் பொன்னாபரணமொன்று பூட்டி அதற்குத் தகுந்த சம்மானம் செய்தான். அவன் அந்தப பூனையைத் தன்னண்டையிலேயே வைத்துக்கொண்டு வேளைதப்பாமல் உணவளித்து ஆயுளளவும் அதைக் காப்பாற்றிவருவது, இதைப் பார்க்கிலும் பூனைக்கு நல்ல சம்மானமாயிருக்கும். அவனப்படிச் செய்தானோ இல்லையோ? தெரியாது.

எளிய வாயில்லா ஜந்துக்களால் நமக்குக் கிடைக்கும் பெரிய உபகாரங்கள் இப்படிப்பட்டவையென்பதற்கு இது ஒரு சிறந்த திருஷ்டாந்தமாம். இவைகளையெல்லாம் நன்ருய்த் தெரிந்துகொண்டால் ஒருவரும் வாயில்லா ஜந்துக்களை அலக்ஷியமாயெண்ணி அனுதாவு பண்ணமாட்டார்களென்று நாம் உறுதியாக நம்புகிரும்.

பணம் படைத்த நாய்.

சிகாகோ பட்டணத்தில் பெரிய வியாபாரியாயிருந்த உவாட்ஸ் என்னும் ஒரு பிரபு சிலநாளைக்கு முன் இறந்துபோனுர். பிறகு அவருடைய மரண சாஸனத்தைப் பார்க்கையில் அவருடைய நாய்க்குத் திரளான பணம் கொடுக்கும்படி அதில் கண்டிருந்தது. தன் வாழ்நாளில் தனக்கு அந்த நாய் செய்த உதவிகளை நினைத்துத் தன் குடும்பத்தாரில் அதையே முதன்மையாகவெண்ணி அப்படி மரண சாஸனம் எழுதிவைத்தார்போலும். வாழ்நாள் முழுமையும் அந்த நாயை நன்ருய்க் காப்பாற்றி வருவதற்காக 2,00,000 ரூபாய் அதன்மேல் எழுதிவைத்தார். அந்த ரூபாயின்வட்டி வரும்படியைக்கொண்டு அதற்கு வசிக்க நல்ல வீடு கட்டிவைத்து, பிரதிதினம் வேளைதப்பாமல் நல்லுணவளிப்பதும், நோயொன்றும் வாராதபடி வேண்டிய வைத்தியோபசாரங்கள் செய்துவருவதும் முதலான வேண்டிய நன்மைகள் செய்துவரும்படி அவர் அந்த சாஸனத்தில் குறித்திருக்கிறுர்.

அமெரிக்காவில் அந்த நாய் பெரிய பணக்காரநாயாக யாவராலும் கொண்டாடப்பட்டுவருகிறது. அதன் போஷணத்துக்கு எஜமானர் ஒருவர் ஏற்பட்டு அடிக்கடி அதைப் போய்ப்பார்த்து அதற்கு வேண்டிய நன்மைகள் செய்து வருகிறுர். வைத்தியர் ஒருவர் ஏற்பட்டு நிமிஷத்துக்கு நிமிஷம் அதைப் போய்ப் பார்த்து அதற்கு நோயொன்றும் வாராதபடி கண்காணித்துவருகிறுர். அந்த நாயின் வாழ்நாள் எவ்வளவு நீடித்திருக்கிறதோ அவ்வளவும் இவர்களுடைய பாக்கியமே. அது இவ்வுலகில் உயிரோடு இருக்குமளவும் இவர்கள் சுகமாய்ச் சம்பளம் வாங்கி ஜீவித்துவரலாமல்லவா? அந்த நாய் இறந்துபோனபிறகு, அந்த 2,00,000 ரூபாயையும் தர்மத்துக்குச் சேர்த்துவிட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தனக்குக் கிடைத்திருக்கிற இந்தப் பெரிய பாக்கியத்தைப் பார்த்து அந்த நாய் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறதோ இல்லையோ, ஒருவருக்கும் தெரியாது. ஆனுலும், அந்தப் போஷகர்களால் அந்த நாய்க்கு அசௌக்கியங்களும் அநேகம் உண்டென்று நாம் உறுதியாய்ச் சொல்லலாம். ஏனென்ருல், அவர்கள் அந்த நாயை அதிகமாய் வெளியே ஓட விடுவதில்லை; வேறு நாய்களோடு கூடி விளையாடவும் விடுவதில்லை; ஓடியாடி எலிகளைத் தேடிப் பிடிக்கவும் வெளியே போகவிடுவதில்லை. அவர்கள் செய்வதெல்லாம் என்னவென்ருல், ஒரு நிமிஷமும் அதைவிட்டுப் பிரியாமல் கருத்தாய்க் காப்பாற்றுகிருர்கள். வேளை தப்பாமல் உத்தமமான ராஜபோஜனம் அளித்து வருகிருர்கள். மற்ற விஷயங்களில் எல்லாம் அதற்கு நிர்ப்பந்தம் தான். அநேகமாய் அது அதற்கு ஆயுளளவும் நீங்காத ஒரு பெரிய சிறைச்சாலையென்றே சொல்லலாம். நாயை வெளியே போகவிட்டால் விரோதியான எவனுவது அதைத் திருடிக்கொண்டு போய் விடுவானென்கிற பயத்தினுல் ஒரு நிமிஷமும் தனியே அதைத் திரியவிடுவதில்லை. பிரதிதினம் தப்பாமல் அதை நல்ல பரிசுத்தமான ஜலத்தில் குளிப்பாட்டிக்கொண்டு வருவதற்கு ஒரு சம்பளக்காரன் ஏற்பட்டிருக்கிறுன். நாள்தோறும் வைத்தியர் வந்து பாராமல் அதற்கு ஒரு காரியமும் செய்வதில்லை. போஜனமோ, அதற்கு ராஜபோஜனமென்று முன்னமே சொன்னேமே. படுக்கையோ, அதற்கு மிகவும் சிறந்ததான பட்டுமெத்தை. இப்படி இந்தநாய் பெரிய பாக்கியசாலியாயிருந்தாலும், தன்னுடைய பாக்கியம் ஒரு பாக்கியமல்ல, தன்னினத்தோடுகூடித் தன்னிச்சையாய்த் தெருவிலோடித் திரிந்து களித்து விளையாடுகிற நாய்களின் பாக்கியமே பெரிய பாக்கியமென்று நினைத்து, தெருவிலோடுகிற அப்படிப்பட்ட நாய்களையே எப்பொழுதும் அது கடைக்கண்ணுல் பார்த்து மகிழ்ந்துகொண்டிருக்கிறது என்று, அதன் செய்தி தெரிந்தவர்கள் ஏகாந்தமாய்ச் சொல்லுகிருர்கள்.

அந்த நாயானது உவாட்ஸ் பிரபுவுக்கு எட்டு வருஷங்களுக்கு முன்னே அவருடைய தாயாரால் கொடுக்கப்பட்டது. அந்த நாய் அந்த அம்மாளுக்கு ஆயுளளவும் இணைபிரியாத தோழனும், நண்பனுமாயிருந்ததனுல், மரணகாலத்தில் அவள் அந்த நாயைத்தன் மகன்கையில் கொடுத்து, இந்த நாய்க்கு என்றைக்கும் ஒரு குறைவும் வராதபடி என்னைப் போலப் பாவித்துக் காப்பாற்றி வரவேண்டுமென்று உறுதியாகச் சொல்லிவிட்டுப் போனுள். அன்று முதல் அவர் 'தாய் சொல் துறந்தால் வாசகமில்லை' யென்று தன் தாயார் சொல்லிப்போனபடியே, ராஜோபசாரங்கள் செய்து அதைக் காப்பாற்றிவந்தார். தான் எங்கேபோனுலும் அதைக் கூடவே கூட்டிக்கொண்டுபோவார்; அது அவரோடு கூடப் போகாத இடமில்லை; அவர் எங்கே போனுலும் வண்டியில் அவர் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டு போகும். ஒரு சமயத்தில் அவர் ஒரு கன்னிகையைத் தன்னுடன் வண்டியில் ஏற்றிக்கொண்டு போக நேரிட்டது. நாய் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து அந்தப் பெண் தான் வண்டியிலேற ஆக்ஷேபித்தாள். அதற்கவர், 'இந்த நாய் பல வருஷங்களாய் என்னேடு கூடவே இந்த

வண்டியில் ஏறிக்கொண்டு வந்திருக்கிறது. இப்பொழுது நீயேன் இதை விரும்பாதிருக்கிறாயோ, எனக்கு விளங்கவில்லை. நீ ஏறினால் ஏறு, ஏறாவிட்டால் போ' என்று சொல்லி மறுத்துவிட்டார். ஆயுளளவும் அவர் கலியாணமில்லாமல் பிரம்மசாரியா யிருந்ததற்கு இதுவே காரணமென்று தோன்றுகிறதென்கிறார்கள். ஆகையால் இந்த நாய் என்றைக்கும் அன்பாகவே வளர்க்கப்பட்டுவருகிறது.

அந்த உவாட்ஸ் பிரபுவுக்கு இந்த நாய் ஒன்று தவிர, அன்பான குதிரையும் ஒன்றுண்டு. அது இப்பொழுது கிழமாகி உழைக்கச் சக்தியில்லாமல் இருக்கிறது. அதன் போஷணத்துக்காக வருஷம் ஒன்றுக்கு 1000 ரூபாய் வீதம் கொடுத்துவரும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்.

வீதியோரத்தில் கண்ட விகாரக் காட்சி.

சிலநாளைக்குமுன் ஜீவ ஹிம்சை நிவாரண சங்கத்துக்கு அக்கிராஸனாதிபதியாயிருக்கும் ஒருவர் ஒருசமயத்தில் ஜீவஜந்துக்களின் அடைக்கலச்சாலையோரமாய் நடந்து போய்க்கொண்டிருந்தார். அப்பொழுது அவ்வழியாக சிறந்த உடை தரித்துத் தட்டித்தள்ளாடி நடந்துவந்த ஒருவன், பக்கத்திலிருந்த கட்டடத்தின் வாயிலை விரலினால் சுட்டிக்காட்டி, நாய்களின் அடைக்கலச்சாலை இதுதானோ? வென்று கேட்டான். அதற்கு அந்த அக்கிராஸனாதிபதி, ஆம், என்று மறுமொழி சொன்னார். அதைக்கேட்ட வழிப்போக்கன் ஆனால், இது நல்ல இடம்தான். நானும் ஒரு நாயே, ஆகையால் நானும் இதற்குள் நுழைந்து செல்வேனென்றான். ஓ, அல்ல, அல்ல, நீ நாயல்ல; நாய் ஒருபோதும் இப்படிக் குடித்து வெறிகொள்ளாதென்று அக்கிராஸனாதிபதி சொன்னார். அதைக் கேட்டு அந்த மனிதன், நீர் சொல்லுகிறபடி நான் நாயல்லாவிட்டாலும், ஒரு பிராணிதானே யென்று குளறிக் கூறினான். அதற்கு அந்த அக்கிராஸனாதிபதி நீ இப்பொழுது சொல்வது சரிதான்; ஆனாலும், உன்னைப்போன்ற பிராணிகளுக்கு இவ்விடத்தில் இடம் கிடையாது என்று சொல்லி மறுத்துவிட்டார். மறுபடியும் அம்மனிதன், இதோ, நான் வேண்டிய பணம் வைத்துக்கொண்டிருக்கிறேன் பாருமென்றுசொல்லி, தன் பையிலிருந்து பணச்சீட்டுச் சுருள் ஒன்றையெடுத்துக் காட்டினான். அதைப் பார்த்து அவர் ஐயோ பாபமென்று பரிதாபப்பட்டு, இவ்விடத்தில் உனக்கு இடமில்லை; இந்தப் பணத்தைச் செலவழிக்காமலும், போக்கடிக்காமலும் சீக்கிரமே நீ வீடுபோய்ச்சேர் என்று அவனுக்குப் புத்தி சொல்லி யனுப்பினார். ஆனாலும் அப்புறம், அந்தப் பணத்தை இந்த ஜீவஜந்து சாலைக்கு உபயோகப்படுத்திக்கொள்ளும்படி அவனைக் கேட்டு வாங்கிக்கொள்ளாமல் போனோமே; அப்படி செய்திருந்தால் அந்தப் பணம் நல்வழியில் உபயோகப்பட்டுப்போகுமே! எப்படியும் அவன் இந்தப் பணத்தைப் பத்திரமாக வீடுகொண்டு சேர்க்கப்போகிறதில்லை. வழியில் யாராவது அடித்துப்பறித்துக்கொள்ளுவார்கள். தப்பினால் இவனேயாவது ஏதோ ஒரு தப்புவழியில் செலவழித்துப்போடுவானே யென்று நினைத்து, துக்கித்து, அவர் பலதரம் பரிதாபப்பட்டதுண்டு. யோசித்துப் பார்க்குமளவில் சகலமான கொடுமைகளுக்கும் இந்தக் குடியே காரணமாயிருக்கிறது. சொந்தக்காரர்கள் குடித்து வெறித்து இருக்கையில், அவர்களுடைய அருமையான சிறந்த நாய்களை அநேகர் கொள்ளைகொண்டு போயிருக்கிறார்கள். கட்குடியர் விஷயத்தில் கொடிய தண்டனை விதிக்காமல் சட்டம் சற்று உபேக்ஷையாயிருப்பதனாலேயே உலகத்தில் அநேகமான குற்றங்களும் வருத்தங்களும், தரித்திரமும், உண்டாகின்றனவென்பது நிச்சயம்.

குடித்து வெறிகொண்ட புருஷர்களும், ஸ்திரீகளும் மதிமயங்கி ஒன்றும் தோன்றாமல் தங்கள் ஆடு மாடுகளையும், குதிரைகளையும், நாய்களையும் கொடுமையாய் அடித்துத் துன்புறுத்துவது மாத்திரமேயல்லாமல், தங்கள் பெண்டு பிள்ளைகளையும் அப்படியே இம்சிக்கப் பலபேர் பலதரம் கண்ணாரக் கண்டும், கேட்டுமிருக்கலாம். அப்படியே ஒருதரம் ஒரு பெருங்குடியன் தன் குதிரையை மட்டுமிதமில்லாமல் புடைத்தான். கடைசியில் அதன் பிராணனே போய்விட்டது. அதைப்பற்றி நியாயஸ்தலத்தில் விசாரணை நடந்தது. அவன் குடியனென்கிற சாக்கைச்சொல்லி அவனுக்கு உபாயமாய் அபராதம் விதித்து அனுப்பிவிட்டார்கள். இக்காலத்தில் குடிகாரருக்கு விதிக்கும் தண்டனை மிகவும் சொற்பமாய் இருக்கிறது. இக்காலத்திலுள்ள சிறுவர்களுக்குக் கள்குடிக்கிற கெட்ட வழக்கம் உண்டாகாதபடி அவர்களுக்கேற்ற நற்புத்தி போதிப்பது மிகவும் அவசியமாயிருப்பதால், அப்படி அதிகமான மயக்கம் உண்டாகிற சாராயங்களை விற்பவர்களுக்கும், அவற்றை வாங்கிக் குடிப்பவர்களுக்கும் கொடிய தண்டனை விதிக்கும்படி சட்டம் ஏற்படுத்துவதே அதற்கு முதலில் செய்யவேண்டிய காரியமாயிருக்கின்றது. இல்லாவிட்டால் இந்தக் கொடுமை ஒருபோதும் அடங்காதென்பது நிச்சயம். அவர்களே சற்று நிதானித்து யோசிப்பார்களானால், இவ்விஷயம் அவர்களுக்கே நன்றாக விளங்கும். ஒருவன் குடிக்கிற வழக்கத்தை முதலில் சிறிதளவு அப்பியாசம் செய்துவிடுவானானால், பிறகு அந்தக் கெட்ட வழக்கம் ஒருபோதும் அவனை விடுவதில்லை. குடிக்க வழக்கப்பட்டவன் தன் ஆயுளளவும், தனக்கும் பிறர்க்கும் சிறிது முபயோகமில்லாதவனாகிவிடுகிறான். அவ்வளவோடும் போகாமல் பின்னும் பலவாயும் தன்

னைப்போலவேயாக்கி யழித்துவிடுகிறான். ஆகையால், அப்படிப்பட்ட குடியர்களை உடனே மாண்டு போகும்படி கடவுள் கற்பிப்பாரானால், அது அவர்களுக்கும் உலகத்துக்கும் பெரிய உபகாரமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

"துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்."

குதிரைகளைப் பரிபாலிக்கும் ஜாக்கிரதையுள்ள ஜப்பானியர்.

ருஷியாதேசத்துக்கும் ஜப்பான் தேசத்திற்கும் முன்னே போர்நடந்தகாலத்தில், ஜப்பான் தேசத்துக் குதிரைப்படையில் இறந்துபோன குதிரைகள் தொகை 100-க்கு 6 வீதமேயாம். தென் ஆப்பிரிக்காவில் யுத்தம் நடந்தபோது அங்கிலேயப் படைகளிலே ஒரு பகுதியில்மாத்திரம் 3,750 குதிரைகள் மாண்டுபோயின வென்கிறார்கள். இந்த இரண்டு போர்களிலும் மாண்டுபோன குதிரைகளின் தொகையில் ஏற்றத்தாழ்ச்சி இவ்வளவு வித்தியாசப்படுவதற்குக் காரணமென்னவென்று விசாரிக்கு மளவில், குதிரைகளைப் போஷிப்பதிலுள்ள வித்தியாசமே முக்கியமான காரணமென்று எல்லாம் நன்றாயுணர்ந்த பெரியோர்கள் உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். ஜப்பான் தேசத்தார், போர்புரியும் காலங்களில் அடிபட்ட குதிரைமுதலான ஜீவன்களை உடனே தக்க வைத்தியம் செய்து அனுகூலப்படுத்துவதற்குப் போர்க்களங்களில் சிறந்த வைத்தியசாலை வைத்துக்கொண் டிருக்கிறார்களாகையால் அவர்களுடைய குதிரைப்படையில் அதிகமான நஷ்டம் உண்டாகவில்லையாம்.

வண்டியுடன் ஓடிப்போன குதிரையை நிறுத்திய நாய்.

வைத்தியர் ஒருவர் நோயாளியான ஒருவர்க்கு வைத்தியம் செய்யும்பொருட்டு அந்நோயாளியின் வீட்டுக்குப்போய் வண்டியை வீதியில் நிறுத்திவிட்டு உள்ளே சென்றார். அப்பொழுது நடந்த அதிசயத்தைக் கேளுங்கள். என்ன காரணத்தினாலோ அந்த வண்டிக்குதிரை வெருண்டு வெகு வேகமாக வண்டியை இழுத்துக்கொண்டு ஓடத் தலைப்பட்டது. ஓடின வேகத்தில் வண்டியின் ஒருபுறத்துச் சக்கரம் பக்கத்திலிருந்த பெரிய மேட்டின்மேலேறிக் குடைகவிழ்ந்துபோயிற்று. அதனால் குதிரை பின்னும் அதிகமாகப் பயந்து தன் வீட்டைநோக்கி முன்னிலும் அதிக வேகமாக ஓடலாயிற்று. அதைப் பார்த்தவர்கள் ஒவ்வொருவரும் அப்படியே பிரமித்து நின்றார்கள்; அதைத் தடுத்து நிறுத்த ஒருவராலும் சாத்தியப்படவில்லை. அப்பொழுது செய்யவேண்டுவது என்ன? அவ்வீட்டு நாயில்லாவிட்டால், அவ்வண்டியும் குதிரையும் அநியாயமாய்ப் போனதுதான். குதிரை வெருண்டு ஓடுவதைப் பார்த்திருந்த அவ்வீட்டு நாய் உடனே கிளம்பி அதிவேகமாய் ஓடி அதிசீக்கிரமே வண்டிக்குதிரையைக் கிட்டி, கடிவாளக் கயிற்றை வாயினால் கெட்டியாகக் கவ்விக்கொண்டது. அதையும் லக்ஷியம் செய்யாமல் குதிரை நாயையும்கூட வீதியில் புரளும்படி இழுத்துக்கொண்டு போயிற்று. அப்பொழுதும் அந்த நாய் கடிவாளக் கயிற்றை விடாமல் உறுதியாய்க் கடித்துப் பிடித்திழுத்து, குதிரையின் வேகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும்படி செய்து, கடைசியில் வண்டியை ஓடவொட்டாமல் நிறுத்தி விட்டது. இந்த அருமையான நாய் ஓடி அந்த வண்டியை இப்படி நிறுத்தாவிட்டால் என்னென்ன அபாயங்கள் நேர்ந்திருக்குமோ தெரியாது. இந்த நாயின் அறிவையும், சாமர்த்தியத்தையும், நாம் எவ்வளவு வியந்து புகழ்ந்தாலும் போதுமோ? மனிதரால் செய்து முடிக்கச் சாத்தியப்படாத அருமையான காரியங்களையெல்லாம் இப்படிப்பட்ட நாய்கள் செய்து முடித்து மனிதருக்கு ஒப்பற்ற துணையாய் இருக்கின்றனவென்றால், அவைகளை அன்புடனே ஆதரித்துக் காப்பாற்றுவதினும் பெரிய காரியம் நமக்கு வேறுண்டோ?

சிறுவர் செய்யும் குற்றங்கள்.

மாடுகளைத் தண்ணீர்குடிக்கத் துறைக்குஒட்டிக் கொண்டு போகலாம்; நாம் அவைகளைத் தண்ணீர் குடிக்கச் செய்யச் சாத்தியப்படுமோ? அவைகளே யன்றோ குடிக்கவேண்டும். அப்படியே, பிராணிகளுக்குக் கொடுமைசெய்யும் சிறுவர்களைப் பிடித்து நாம் காவலில் வைக்கலாம். செய்த குற்றத்திற்குச் சாக்ஷியும் தேடிக் கொடுக்கலாம். நியாயாதிபதிகள் ஜந்துக்களிடத்தில் ஜீவகாருணிய மில்லாதவர்களாய், குற்றவாளிகளைத் தண்டியாமல் விட்டுவிட்டால் அதற்கு நாம் என்னசெய்வது?

சிறுபிள்ளைகள் இரண்டுபேர் ஒரு பூனையைப் பிடித்து நெருப்பின்மேலே காட்டிக் கொளுத்தி வேடிக்கைசெய்து விளையாடினார்கள். பத்திரிகைகளில் குறித்த இக்கொடிய செய்கையின் விவரங்களைப் பலர் படித்துப் பார்த்து 'இதென்ன கொடுமை' யென்று அந்தச் சமயம் உடல் நடுங்கித் திடுக்கிட்டிருக்கலாம். ஆனாலும், அந்தக் கொடுமையை அப்பொழுதே மறந்து போயிருப்பார்கள். இப்படிப்பட்ட பயங்கரமான கொடுமைகளை இவ்விதமாய் அலக்ஷியமாக விட்டுவிடலாமா? ஆனாலும், அந்த இரண்டு பிள்ளைகளும் குற்றவாளிகளேயென்று குற்றம் சாட்டப்பட்டதென்று சமாசார பத்திரிகை

களால் தெரியவருகிறது. அப்படிக் குற்றஞ்சாட்டியும், அந்தப் பிள்ளைகளை உடனே தண்டிக்காமல், சோதனையில் வைத்திருக்கும்படி நியாயாதிபதி உத்தரவு செய்தனராம்.

சிறு குற்றங்களை விசாரிக்க நியாயஸ்தல மேற்பட்டிருக்கையிலும், வெறிகொண்ட நாய்களைப் பார்க்கிலும் கேடுகெட்ட இப்படிப்பட்ட கல்நெஞ்சரான பிள்ளைகளைக் கேட்பாரில்லாமல் நாட்டில் திரியவிட்டுவிட்டால் குற்றமற்ற குழந்தைகளுக்கு இப்படி இன்னும் என்னென்ன சித்திரவதை செய்யத் தலைப்படமாட்டார்கள். சிறுபிள்ளை காரியந்தானேயென்று பெற்றோர் சிலர் தாம் அக்கொடுமைகளைக் கண்டிக்காமல் விடுவதோடு, இப்படிப் பிள்ளைகளைத் திரியவிடலாமாவென்று யாராவது கேட்டால், அவர்கள்மீதும் கோபங்கொள்ளுகிறார்கள். நியாயாதிபதிகளும் பெற்றோர்களுமிப்படிப் பிள்ளைகளைக் கண்டிக்காமல் அலக்ஷியமாக விட்டுவிட்டால், மேன்மேலும் குற்றம் செய்யும்படி அவர்களைத் தூண்டிக்கொடுப்பதுமேயாகுமே. இப்படியானால், சிறுபிள்ளைக் குற்றங்களை விசாரிக்க நியாயஸ்தலம் ஏற்பட்டதன் பிரயோஜன மென்னவோவென்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது.

ஒரு நல்ல நாய்க்குச் செய்த சிறந்த வெகுமதி.

பட்டி நாயொன்று நடுக்காட்டிலே ஆட்டுமந்தைகளை மேய்த்துக் காப்பாற்றுவதில் தன் எஜமானனுக்குச் செய்த அருமையான உதவிகளைப் பார்த்து அவ்வழியேபோன பிரபு ஒருவர் அதன் திறமையை மிகவும் கொண்டாடி, அதற்கு விலைபெற்ற கழுத்துப்பட்டை யொன்று வெகுமதி செய்தார்.

அந்தக் கழுத்துப்பட்டை கறுப்புத்தோலினால் செய்து வெள்ளிப்பூட்டு போடப்பட்டது. அந்தப் பட்டையின் ஓரமெல்லாம் வெள்ளியால் கட்டடம் கட்டி அதில் முப்பது நீல ரத்தினங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன. ரத்தின பரீக்ஷகர் ஒருவர் அவைகளைப் பார்வையிட்டு அந்த ரத்தினங்களெல்லாம் வைரீயமென்றும், மிகுந்த விலைபெற்றவையென்றும் சொல்லிக் கொண்டாடுகிறார்.

அப்படிப்பட்ட அற்புதமான கழுத்துப்பட்டையை நாய்க்குப் பரிசு அளித்த பிரபு இன்னாரென்று கண்டறிய அநேகர் ஆவல்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், தம்மை வெளிக்குக்காட்டிக்கொள்ள அவருக்குச் சம்மதமில்லையாம்.

வழியே வண்டியேறிப் போய்க்கொண்டிருந்த இந்தப் பிரபு ஆட்டு நாயின் அதிசயமான சாமர்த்தியத்தைக் கண்டு வியந்து உடனே வண்டியைவிட்டுக் கீழே இறங்கி ஆட்டுக்காரனண்டை போய் 'தம்பி! நீ போட்டிருக்கிற கழுத்துப்பட்டை உன் நாய்க்குத் தகுந்ததென்று எனக்குத் தோற்றவில்லை; இதற்கு ஏற்ற பட்டை ஒன்று என்னிடம் இருக்கிறது, அதை இதற்குக் கட்டிப்பார்' என்றான். அப்படியே அந்த இடையன் பழைய பட்டையை அவிழ்த்து எறிந்து, பிரபு கொடுத்த புதுப்பட்டையைத் தன் நாயின் கழுத்திலே கட்டினான்.

அது அந்த நாயின் கழுத்திற்கு அழகாயிருந்தாலும், கொஞ்சம் பெரியதாய்த் தலையாலே கழன்று விழுவதுபோலிருந்தது. அதைப்பார்த்து இடையன், 'இது சிறிதளவு பெரியதாயிருக்கிறது; ஆனாலும், நானே இதைச் சரிப்படுத்திக்கொள்ளுகிறேன்' என்றான்.

'வேண்டாம், உனக்கு அந்த வருத்தம் வேண்டாம். நானே நாளையதினம் சரியாகச் செய்து கொண்டுவருகிறேன்' என்று சொல்லி வாங்கிக் கொண்டுபோய், அப்படியே செய்துவந்து அந்தப் பிரபு தானே அதை நாயின் கழுத்தில் கட்டினான். அதன் வெள்ளிப்பூட்டுக்குத் திறவுகோலும் வெள்ளியாலேயே செய்யப்பட்டது. வாயில்லா ஜீவனிடத்தில் அபிமானம் இப்படியல்லவோ இருக்க வேண்டும்!

நானாவிஷயங்கள்.

பாடசாலைப் பிள்ளைகளுக்குச் செய்விக்கும் ஜீவகாருணிய போதனை.—அமெரிக்காவிலே சிறுபிள்ளைகளுக்கு ஜீவகாருணியப் பயிற்சி அதிகமாகச் செய்விக்க வேண்டுமென்கிற முயற்சி இப்பொழுது விசேஷமாக நடந்துவருகிறது. அதற்கு ஒரு வித்தியாசாலைத் தலைவர் முதன்மையாய் ஏற்பட்டு வேண்டிய காரியங்கள் செய்துவருகிறார். அவர் பிரதி பிரயோஜனம் ஒன்றையும் எதிர்பாராமலே, தன் வித்தியாசாலை வேலைக்கும் தடங்கல் உண்டாகாமல், தினந்தோறும் தன் ஒழிவுவேளைகளில் ஜீவகாருணிய விஷயமான படிப்பினைகளைச் சிறுவர்களுக்குப் போதித்துவர ஒப்புக்கொண்டிருக்கிறார். அன்றியும் அவர் அங்கங்குள்ள பல பாடசாலை உபாத்தியாயர்களை வரவழைத்துச் சபைகூட்டி, அவரவர் தம்தம் பாடசாலைகளிலுள்ள சிறுவர்களுக்கு ஒழிவு வேளைகளில் ஜீவகாருணிய போதனை செய்து பிள்ளைகளுக்கு நல்லொழுக்கத்தை விருத்தி செய்விக்கும்படி வேண்டிய பிரசங்கங்கள் செய்து வருகிறார்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1907.